# இந்துசாதனம்

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஒ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5.00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஹு மார்கழிமீ கூ௨ (1923 டிசெம்பர் 24) திங்கட்கிழமை { இலக்கம்—௬அ.


உ

**கணபதி துணை.**

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்
**சைவபரிபாலனசபையாராற்**
**பிரசுரஞ் செய்யப்பெற்ற**
## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச: |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | க௫ |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்" வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்[illegible] பெற்றது [illegible] | |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன் றூது, உரையுடன் | அ௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினுவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும்... | உ௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உ௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம் ... ... ... | க-உ௫ |
| நவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௮ |
| குமணசரித்திரம் ,, | ௮ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | க௫ |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாரால்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,


[ESTABLISHED 1909].

### MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot District*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திலெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடையச்செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களாள் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், தாதுவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய இமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. [illegible] விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHŒA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய ரோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேகூடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு [illegible] [illegible]ங்கு, சிங்கப்பூர், சிலோன், கோலாலம்பூர், [illegible] ரூபா 2ம் [illegible] முற்பணமனுப்பி[illegible] பெறவேண்டும். வைநூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது வைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.



## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டவுடனேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.



## "லோகோபகாரி".

28-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிடுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம். ஸ்ரீமான். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராக இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா ஆறு, மாதிரிப்பிரதி இனும்,

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.



**காகிதாடா சேலை.**

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லிசிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, கற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.



**வெள்ளிக்கெண்டைச்சால்வை.**

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் சேர்த்தியாகவும் பளபளப்பாகவும் நைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்ச வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.



உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

**மன்மத கோலாகலக் குளிகை.**

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, புஷ்டி உண்டாகும். ஐம்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு
**குருநாக பஸ்பம்**

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு
**குருதாளக பஸ்பம்.**

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இரு[illegible] சுவாசம், கோழை, கபக்கட்டு இன[illegible] வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தரும், எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

**பிரமேக நிவாரணி**

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவருது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

**மாந்திரீக சத்து.**

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.



உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது
புஷ்டிக்கு கைகண்ட
**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0.
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்குமப். 1-புட்டி ரூ. 2/

**பிளேக் மாத்திரை.**

ஆரம்பகட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் காய்ச்சலை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q 541 வைத்.) தியாசாலை, பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி௵ மார்கழி௴ 9௳ திங்கட்கிழமை.


## குடியிருக்க வகையில்லை.

இந்த யாழ்ப்பாணப் பகுதியிலே சில வாரங்களாகப் பெருந் தொகையான களவுகள் நடைபெற்றுவருகின்றன. எங்கு பார்த்தாலும் "அந்த வீட்டிலே கள்ளன் வந்து புகுந்தான்; இந்த வீட்டிலே தாலியறுத்தான்; உந்த வீட்டை இடித்துக் களவெடுத்தான்" என்ற இந்தப் பேச்சே எப்பொழுதும் சனங்கள் வாயிலிருக்கின்றது. இந்தக் கள்வர் காரணமாக இங்குள்ள சனங்கள் பெருந் திகிலடைந்திருக்கின்றார்கள். வண்ணார்பண்ணையிற் சில தினங்களுக்கு முன் கள்வர் ஒரு வீட்டுட் பிரவேசித்து, பெட்டியையுடைத்து அதனுளிருந்த விலையுயர்ந்த ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் களவெடுத்துக்கொண்டு, அங்கு படுத்து நித்திரையாகக்கிடந்த பெண்ணின் தாலிக்கொடியையும் வெட்டியெடுத்துக்கொண்டு போகும்போதே அப்பெண்ணும் வீட்டிலுள்ள ஏனையோரும் விழித்தெழுந்து கூக்குரலிட்டனர். இதற்குட் கள்வர் அகப்பட்ட பொருளுடன் ஓட்டம் பிடித்தனர். இவர்களுக்கு இதனால் நேர்ந்த கஷ்டம் உ௫00 ரூபா வரையிலிருக்குமென மதிப்பிடப்படுகின்றது. ஓட்டுமடத்தடியில் ஒரு வீட்டினுள் ஓர் பெண் துயிலும்போது பெண்ணின் கழுத்திலிருந்த அட்டிகையை நறுக்கி எடுத்துச் சென்றனர். வேறோரிடத்தில் ஒரு வீட்டிலே பிரசவித்துச் சில நாட்கள் மாத்திரஞ்சென்ற ஒரு மனுஷி படுத்திருக்கும்போது, திருடர் வீட்டுட்பிரவேசித்து, மனுஷியின் தாலிக்கொடியிற் கைவைக்கவே மனுஷி கூக்குரலிட, அம்மனுஷிக்குக் கன்னத்தில் ஓர் அறை உறைக்க அறைந்துவிட்டு ஓட்டம் பிடித்தனர். ஆனால் தாலிக்கொடி தப்பிவிட்டதாம். இங்ஙனம் எங்கு பார்த்தாலும் களவு போனசெய்தியைப்பற்றிய பேச்சுக்களும், இதற்கென்ன செய்யலாமென்ற சிந்தனை[illegible]கள் வீடுகளிலும் கள்வர் வந்து [illegible]விடுவார்களோ என்ற அச்சமும் இந்நாட்களில் இங்குள்ள சனங்களிடத்திற் குடிகொண்டிருக்கின்றன.

சில இடங்களிலே களவு நடந்த மாதிரியை ஊன்றிச் சிந்திக்கும்போது இக்கள்வர் ஒருவரிருவரல்லர், தற்காப்புக்கும் களவு செய்தற்குமான ஆயுதங்களுடன் பலர் ஒருங்கு சேர்ந்து கூட்டங்கூட்டமாகத் திரிகின்றார்களென அனுமானிக்கக் கிடக்கின்றது. களவெடுத்து ருசிகண்ட இக்கள்வர் பிடித்துத் தக்கபடி தண்டிக்கப்படாதொழியின், காலகதியில் இந்தியாவிலுள்ள தீவர்த்திக் கள்வர்போற் பெருங் கூட்டமாகச் சேர்ந்து இங்கு குடியிருப்போரைக் கொள்ளையடிக்கத் தலைப்படுவரென்றே சொல்லல்வேண்டும்.

இக்கள்வரை எவ்வாற்றானுங் கண்டு அகப்படுத்தித் தக்கவாறு தண்டித்து, இங்குள்ள சனங்களின் அச்சத்தையும் பொருள் நஷ்டத்தையும் நீக்கி அவர்களைப் பயமின்றி வாழச் செய்வது யார்மேற் பொறுத்த கடன்? அரசனுடைய கடனாகும். எங்ஙனமெனின்:

> மாநிலங்காவலனாவான்
> மன்னுயிர்காக்குங்காலைத்
> தானதனுக்கிடையூறு
> தன்னாற்றன்பரிசனத்தா
> லூனமிகுபகைத்திறத்தாற்
> கள்வராலுயிர்தம்மா
> லானபயமைந்துந்தீர்த்
> தறங்காப்பானல்லனோ.

செங்கோன்மன்னனானவன் தன்னாலும் தன் பரிவாரத்தினாலும் பகைவராலும் கள்வராலும் துஷ்ட விலங்குகளாலும் பிரஜைகளுக்கு யாதும் இடையூறு வாராவண்ணம் அவர்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவனாயிருக்கின்றான். இப்பொழுது எங்களுக்குக் கள்வராற் பெரும் இடையூறுகள் விளையத் தொடங்கிக்கொண்டமையினால் அந்த இடையூறுகளை நீக்குவது நமது அரசினர்மேற் பொறுத்த கடனாகும்.

பொலிஸ்தானம் அதிகஞ் சமீபத்திலிருக்கப் பெற்றதும் பொலிசரின் காவல் சஞ்சாரம் என்னும் இவைகளையுடையதுமான இவ்வண்ணார்பண்ணையில் இந்தவிதமாகக் களவுகள் அதிகரிக்குமாயின் அது யாரைப் போய்ச் சாரும்? பட்டினத்தைக் காக்கும் பொலிஸ் அதிகாரிகளையேசாரும். இங்கே பட்டப்பகலிலுங் களவு நடந்திருக்கின்றதே. அந்த வரலாற்றையுந் தருகின்றேம்:

சென்ற நவம்பர்௴ வண்ணார்பண்ணையில் ஒரு வீட்டிற் பட்டப்பகலில் இரு திருடர்கள் சென்று சில பொருள்களைத் திருடினார்கள். அவ்வீட்டில் வசிக்கும் பெண் ஸ்நானஞ்செய்துவிட்டுக் கிணற்றடியிலிருந்து வந்தபோது கள்வர்களைக் கண்டு சத்தமிட கள்வர் எடுத்த பொருள்களையும் எறிந்துவிட்டு ஓட்டம் பிடிக்க தெருவாற் சென்றவர்கள் அவர்களைத் துரத்துசென்றும் கள்வர் ஒருவாறு நழுவிவிட்டார்கள். பின்பு பொலிஸ் சப்இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் டேல் (உதவிப் பரிசோதகர்) இக்கள்வர்மீது வழக்குத் தொடர்ந்தனர். விளக்கத்திலே சாட்சிகள் சிறிது மாறுபாடாகச் சொல்லியமையினாலே எதிரிகள் நிரபராதிகளெனக் காணப்பட்டனர். தீர்ப்புச்சொல்லும்போது, குறித்த எதிரிகள்மீது தமக்குச் சந்தேகமிருந்தாலும் சாட்சிகளின் வாய்ப்பிறப்பு மாறுபட்டமையினாலே இவர்களை நிரபராதிகளெனக் காண்கின்றேன் என்று நீதிபதி கூறியிருக்கின்றார். இனி, இந்த வழக்கில் ஒருவிஷயம் நாஞ்சொல்லத்தக்கது. இந்த வழக்கைத் தொடர்ந்தவராகிய மிஸ்டர் டேல் வழக்கு முடிவதற்கு முன்னர் திரிகோணமலைக்கு மாற்றப்பட்டார். அவர் இல்லாதசமையத்திலேயே வழக்கு விளங்கித் தீர்ப்புச் சொல்லப்பட்டது. இவ்வாறான வியாச்சியங்களில் பொலிஸ் அதிகாரிகள் இப்படி அலட்சியமாயிருப்பது புத்தியாகாது. மிஸ்டர் டேலை இங்கு நின்று வியாச்சியத்தை நடத்தியிருப்பரேல் இந்த வியாச்சியம் பிரதிகூலமாக முடிந்திராது. பொலிஸ்வரி கொடுத்துக்கொண்டு பொலிஸ் காவலுக்குள் அச்சமின்றியிருக்க வேண்டிய நாங்கள் அங்ஙனமின்றி நித்திய பயத்தோடு நித்திரையுமின்றியிருக்க வேண்டிய காரணமென்ன? "செட்டிக்கு மிறுத்துப் பைக்கும் இறுத்தவாறு" பொலிஸ் வரியுங்கொடுத்துக் கள்வருக்கும் பொருளைப் பறிகொடுக்கச் சனங்களால் முடியுமா? இந்தக் கள்வர்களை அகப்படுத்தித் தக்கபடி தண்டிக்கும்வரைக்கும் இங்குள்ள பொலிசர் பலர் மாறுவேடம்பூண்டு இராக் காலத்திலே தமக்குச் சந்தேகமுள்ள இடங்களிலே மறைந்து சஞ்சரிக்க வேண்டும். கள்வரைப் பிடித்துக் கொடுக்கும் பொலிசருக்குத் தக்க சன்மானஞ் செய்யப்படுமெனப் பொலிஸ் தலைவர் அவர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். களவு கொடுத்த ஊரவர்களும், ஒரு வீட்டிற் கள்வர் வந்து ஆளரவங்கேட்டுக் கலைந்து சென்றால் அந்த வீட்டி[illegible] பவரும் விடிந்தவுடன் பொலிஸ் தானத்திற்குச் சென்று அனறிரவு நிகழ்ந்தசெய்தியைப் பொலிஸ் தலைவருக்கு முறையிடுதல் வேண்டும். தலைமைக்காரரும் ஊரவர்களும் பொலிசருக்குத் தங்களால் இயன்ற உதவிகளெல்லாம் இந்த விஷயத்திற் செய்தல்வேண்டும். இங்ஙனம் எல்லோருஞ் சிறிது விழிப்பாயிருப்பரேல் களவாகிய இப்பெருந் தீமை இங்கு விளையாது தடுத்தல் இலகுவான கருமமாகும். இதனை நமது பொலிஸ் தலைமை உத்தியோகத்தர் சிந்திப்பாராக. நமது வடமாகாண ஏஜண்டரவர்களும் இவ்விஷயத்தைச் சிந்திப்பார்களெனச் சனங்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

## இருமணி.

### சத்தும் சதசத்தும்.

(சைவம்.)

"எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத் தானேயாகிய தயாபரன் எம்மிறை."

முன்வாசகத்தில் (கடவுளும் உலகும்) குறித்துள்ள இரண்டு திருமந்திரங்களின் பொருளை விளக்கப் புகுவாம். இவ்விரு மந்திரங்களும் ஒருவாறு ஒன்றாகத்தோற்றுவதால், யூகித்துணராவிடின், அவைகளின் பொருள் கெட்டுவிடும்.

> பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
> பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
> தன்னை மறைத்தது தனுகரணங்களாம்
> தன்னின் மறைந்தது தனுகரணங்களே,
>
> மரத்தை மறைத்தது மாமத யானை
> மரத்தின் மறைந்தது மாமத யானை
> பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

இம்மந்திரங்கள் உயிரின் பந்த மோட்ச நிலைகளை யுணர்த்தி, அது தத்துவ தரிசனம், ஆத்தும தரிசனம், சிவ தரிசனம் ஆகிய முத்திரேணியில் ஏறிச் செல்வதை விளக்கும். முதன் மந்திரத்தில் பார்ப்பவன் கண்ணுக்குப் புலப்படுவது ஒரு பொன் அணி. இதில் இருவகைக்காட்சியுளது. அதைப் பொன்னாகவாவது அல்லது அணியாகவாவது நோக்கலாம். பொன்னாக நோக்குங்கால், அதன் நிறம் மாற்று, இடை முதலியனவை முன்னுக்கு முனைத்து நிற்கும். அப்பொழுது அது அணியென நமக்குத் தோற்றாது. அது போலவே, அதை அணியாக நோக்குங்கால் அது காதணியோ, கழுத்தணியோ, கையணியோ வென்பன முனைத்து நின்று அது இன்ன விதமான பொன் என மனத்தில் வராது. ஆயின் இவ்விருவிதக்காட்சி நிகழுங்காலத்திலும், பொன்னாவது, அணியாவது, பார்ப்பவனாவது உளதாகாமற் போகவில்லை அவைகளை மித்தை யென்றும் பொய்யென்றுஞ் சொல்லுவதற்கிடமில்லை, அவசியமுமில்லை. பொருள் ஒன்றாயிருந்தும் காட்சிபேதத்தால் வேறாகின்றதன்றி நாம் எவ்விதத்தினும் மருண்டதில்லை. ஒரு பொருள் இரு காட்சியுடைத்தாயிருப்பதில், நம்முடைய மனமும் ஒரு காட்சியினின்றும் மற்றொரு காட்சிக்கு மாறும் இயல்புடையதாயிருக்கின்றது. இவ்விரு காட்சியினும் பயனுண்டு. ஒருவன் ஒரு நகை வாங்கவேண்டுமென்று ஒரு நகை வியாபாரியின் கடைக்குச் சென்று நகையைப் பரீட்சிக்குங்கால் அவன், பொன்னும், நகையும் நாம ரூப மாத்திரந்தானே, அவையெல்லாம் மித்தைதானே யென்றிடங்கொண்டு பேரம் செய்வானானால் அவன் மோசம் போகானோ! ஒருவன் தனக்கு என்ன மாற்றுத் தங்கத்தில் என்ன நகை வேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டு வியாபாரி கொடுக்கும் நகை தான்கோரும் மாற்றிலிருக்கிறதாவென்று பார்த்து, பார்த்து, பிறகு தனக்குப் பிடித்தமான நகையா வென்றும் சோதிப்பான். இவ்வுதாரணத்தை மேற்கொண்டு திருமூலநாயனாரும், உயிர்க்கும் உடலுக்கும் (Subject and Object) உள்ள இயைபினை உணர்த்தப்புகுந்தார். 'தன்' என்னும் பதம் உயிர, சீவன், பசு, ஆன்மா என்னும் பரியாயபதங்களால் உணர்த்தப்படும் புருஷனை உணர்த்தி நிற்கின்றது. 'தனுகரணங்களாம்' என்றதனாலும் இதன் பொருள் மேலும் நிலையுறுத்தப்பட்டது. அப்படிக்கன்றி 'தனு' என்னும் மொழி மாயாவாதி கூறுவதுபோல் பரம்பொருளை யுணர்த்தாது. 'தனு கரணங்களுக்கு' மேல் நின்றது அவர்கள் மதப்படி பரமானதால் அவர்களும் இப்பொருள் கூறி இடர்ப்பட்டார்கள். இப்படித் தப்பர்த்தம் செய்யக்கூடுமென்று எண்ணியே, நம் நாயனாரும் "மரத்தை மறைத்தது" என்று எடுத்துப் பின்னும் அருளிச்செய்தார். 'உயிர் உடல்' (Mind and Body) என்ற முன்னொரு வியாசத்தில், நம் நாயனார் கருத்தின்படி இவற்றிற்குள்ள சம்பந்தம் இன்ன [illegible] அதுவும் உயிர் உடலுக்கு இதம் தரக்கூடிய பொருளையும் செயலையும் நாடி அவ்வுடலுக்கே உழைத்து உலகோடு விஷயீகரித்து நிற்கையில், தன் உயிரும் உலகோடொன்றாகி, தான் கெட்டு நிற்கின்றான், மறைந்து கிடக்கின்றான். நம்நாயனாரின் சொற்கூற்றைக் கவனிக்க ஒவ்வொரு சமயமும், இதுவெல்லாம் மித்தை மித்தை என்று மொழியவில்லை. 'மறைத்தது' 'மறைந்தது' என்றே மொழிந்தார். உயிராவது உடலுலகாவது மித்தையன்று, பொய்யன்று. உயிர் உடலோடு ஒற்றி விஷயீகரித்து நின்றபோது (Objective condition) உயிர் உடலினால் (Object) மறைக்கப்பட்டது. உயிரும் உலகை மறைத்து உலகோடு ஒற்றி நில்லாதபோது, உலகு மித்தையானதில்லை. உயிரில் மறைந்தே நின்றது, இழந்து நின்றது. சில மந்தமதிகள் இவையெல்லாம் சொல்வாத மென்பர்கள். ஆயின், ஒவ்வொரு மொழியும் ஒரே பொருளில் உபயோகிக்கவேண்டுமென்னும் தர்க்கநியாயத்தைக் கைப்பற்றி, ஒவ்வொரு மொழியையும் சரியாகப் பிரயோகிக்கவேண்டிய அவசியமன்றோ? இவ்விதமாக மொழிகளைச் சரியான பொருளில் உபயோகப்படுத்தாமல் மயக்கம் கொள்ளும்படி கூறுவதனாலன்றோ அநேக துர்விவாதங்களும் தலையெடுத்தன. இது நிற்க. இவ்விதமாக உயிர் உடலோடு ஒற்றி மறைந்து கிடக்கும் நிலைக்கு அதன் பந்தநிலை அல்லது பாசபசுநிலை யென்று பேர். உயிரை மறைத்து நிற்பதற்குப் பந்தமென்றும் பாசமென்றும் மலமென்றும் அவித்தையென்றும் பேர். தன்னையும் உலகையும் வேறுபடுத்தி, இவ்விரண்டின் உண்மைச்சொருபத்தை உணர்ந்து, தான் உலகல்லவென்று தன்சொருபத்தில் நிலைக்கும்போது, உயிர் தத்துவ தரிசனத்தையும் ஆன்மதரிசனத்தையும் அடைந்ததாகும். (இவைகளின் விவரங்களை உண்மைநெறிவிளக்கத்திலும், சித்தாந்தத்தில் வெளிவந்த 'திரிபதார்த்த தசகாரியத்திலும்' பார்க்கவும்.) இவ்வுண்மை யுணர்வினால், உண்மை நீதிபோதம் (Ethics) முற்றும் விரிக்கின்றது. ஒருவன், உலகாசையில் முழுகிநிற்கவும், தன் அறிவு இச்சையெல்லாம்மழுங்கி, தீயசெயல்களைச் செய்து துன்பத்தில் ஆழ்கிறான். இவ்வுலகப் பற்றினின்றும் விடுபடவும், தானும் துயரினின்று விடுபட்டு, தன் மேலான குணங்களையும் அறிவையும் விளக்கிப் பழக்கத்தினால், ஆன்மசத்தி அடைகிறான். இவ்விதமாவதும், உயிரின் ஒரு முக்கிய தன்மையாகிய அதுவது ஆதல் தன்மையால் உண்டாகியதென்று முன்வியாசத்திலேயே விரித்துள்ளோம். நாம் கண்டமட்டும், இவ்விரிவும், சைவ சித்தாந்த நூல்களிற் கண்டதன்றி, மற்றெந்த மதவாதிகள் நூல்களினும் விரிக்கக் கண்டிலேம். இத்தன்மையினால், இது சத்தும், அசத்தும் ஆகாமல் நடுவேநின்று சதசத்தென்று பேர்பெறுகின்றது.

இத்தன்மையை, ஆணும் பெண்ணும் அல்லாத அலியென்று ஆன்மாவை "ஒழிவிலொடுக்கம்" என்னும் அரிய நூலில் கண்ணுடைய வள்ளலார் கூறுகின்றார். அலியெனினும், அதன் பாலைக் கூறும்போது ஆணுறுப்பு மிகுந்தால் ஆணாகும், பெண்ணுறுப்பு மிகுந்தால் பெண்ணாகுமென்று தமிழ் இலக்கணம் கூறும். ஆகையால், அலியாகிய ஒருவள் 'அவன்' என்றாவது 'அவள்' என்றாவது அழைக்கப்படுமென்றி 'அது' என அழைக்கப்படாள். அதுபோலவே, உயிரும், அசத்தாகவாவது, சத்தாகவாவது நிலைபெற்று வாழுமன்றி, தனித்து வாழாது. அதாவது, இவ்விரு பொருளுடன் பற்றி நில்லாது தானாகத் தனித்து நில்லாது. கடவுளாவது உலகமாவது இல்லாவிடில், உயிர் என்ற ஒரு பொருளே இருக்கமாட்டாது. ஆகையினால் நம் மெய்கண்டநாதனும் இந்நிலையை இரண்டு உதாரண முகத்தால் விளக்குகின்றார். அவையாவன ஊசலும் (ஊஞ்சல்) சிறைசெய் நீருமாம். ஊஞ்சல் கயிற்றினால் ஒன்றில் கட்டியிருக்கவேண்டும். வடம் அற்றால் பூமியில்தான் விழவேண்டும். ஆகாயத்தில் தனித்து நில்லாது. ஒரு ஏரியில் கட்டுண்ட நீரும், கரையுடைந்தவழி அங்கு நில்லாது வேறு புலத்து விரைந்து செல்லும். முற்கூறிய உதாரணத்தை முன்னிட்டு நம் நாதர் 'அத்திப் பழம் ஏன் கீழே விழுகின்றது' என்னும் கேள்வியின் பொருளை உணர்ந்திருந்தாரென்று வெளியாகிறது. மரத்தின் பலத்தால் தாங்கப்பெற்று அதன் ஆதரவால் ஊஞ்சல் மேல் நின்றது. அதன் வலிவு குன்றியவழி, இன்னொரு சக்தியால், பூமியின் ஆகருஷண சக்தி (Force of Gravity)யால் இழுக்கப்பட்டு பூமியில் சேருகின்றது. இவ்விரண்டு சக்தியின் ஊஞ்சல் இடைப்பட்டுகின்றது. எனினும், அது மரம் அல்லது பூமியுடன் இயைந்தே நிற்கவேண்டும். பூமியின் அபாரசத்தியால் இழுக்கப்பட்டும், மரத்[illegible]சக்காலம் மட்டுந்தான், மரத்தின் கொம்பில் பழம் பழுத்தவுடன் கொம்பு எவ்வளவு இழுத்தாலும் பழம் நில்லாது, மண்ணுடன் சேர்ந்து மண்ணாய்விடும். அற்றதும் பூமியைப் பற்றியதும் ஓரே சமயம். அதுபோலவே பாசங் கழன்றால் பசுவுக்கிடம் பதியாம்.

## கல்லூரிகள் கண் தூங்கலாமா?

எங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மதுவிலக்குச்சபைகள் அந்நியநாட்டு மதுபானநீக்கத்தின் பொருட்டு வெகு சிரமத்தோடு உழைத்துவருகின்றன. இத்தேசகைங்கரியத்தின்பொருட்டு யாழ்ப்பாணத்திலுள்ள புதினப்பத்திரிகைகளும் தீவிரமுயற்சி செய்கின்றன. இந்த அரும்பெருந் தருணத்தில் இங்குள்ள கல்லூரிகள் "இராமன் ஆண்டாலென் இராவணன் ஆண்டாலென்" எனக்கூறி மௌனஞ் சாதித்தல் கூடாது. எதிர்கால யாழ்ப்பாணம் இப்பொழுது கல்லூரிகளிற் கல்விகற்கும் மாணவர்களுடையது. கல்லூரி ஆசிரியர்களுடைய தலைமையின் கீழ் இம்மாணவர்கள் மதுவிலக்கு விஷயமாகப் பயிற்றப்பட்டு மதுவிலக்குச் சபையாரோடு சேர்ந்துழைப்பார்களாயின் அம்மாணவர்கள் உலகவாழ்க்கையிற் பிரவேசிக்குங்காலத்திற் பெருநன்மையை யடைவதோடு மிகவும் கண்ணியமுமுடையவர்களாக விளங்குவார்களென்பதிற் சந்தேகமில்லை. அந்நியநாட்டு மதுபான நீக்கத்திற்காகக் குறிக்கப்பட்ட திகதியோ சமீபித்துவிட்டது. இன்னமும் வாளாகிடக்கின் ஆளாவதெப்படி? கல்லூரி ஆசிரியர்கள் இவ்விஷயத்தில் விசேஷ சிரமங்கொள்ளுதல்வேண்டும். உயர்தரமாணவர்களுக்கு மதுபானத்தினால் விளையுங் கேடுகளை எடுத்துப் போதித்தல் வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் இவ்விஷயத்தில் முன்வருவார்களாயின் எங்கள் காரியம் சித்தியாகுமென்பது திண்ணம்.

## கிருஷிக்காட்சி.

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்குப் பகுதிகளுக்குப் பொதுவான ஓர் கிருஷிகக்காட்சி 1924-ம் ஆண்டு வைகாசி மாதத்திலே இருநாட்களாகச் சுன்னாகச் சந்

ளையிற் காட்டப்படும். இதற்குரிய ஒழுங்குகளை யோசிப்பதற்கு வடமாகாணஏசண்டர் சென்றகிழமை மல்லாக நீதிஸ்தலத்தில் ஓர் சபை கூட்டினர். இருபிரிவு மணியகாரரும் அவருக்குக் கீழான தலைமைக்காரரும் ஊர்ப்பிரபுக்களுஞ் சமுகமாயிருந்தனர். அவ்வேளையில் வலிகாமம் மேற்கு மணியகாரன் முதலியார் சந்திரசேகரமவர்கள் காட்சியைப் பற்றிச் சபையோருக்கு விளங்கப்படுத்தினர். அதன்பின்னர் வைகாசிமாதத்திற் சுன்னாகச் சந்தையிற் காட்சி காட்டப்படவேண்டுமென்னும் நிர்ணயஞ் செய்யப்பட்டது. காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்குச் சபையோர் ஓர் நிர்வாகசபையை ஏற்படுத்தியிருக்கின்றனர். பொதுக் கூட்டமும் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இருபகுதி மணியகாரரும் லிகிதர்களாக நியமிக்கப்பட்டனர். காட்சியில் விசேஷமாய் மதிக்கப்பெறும் பொருட்களுக்காய் அவைகளை உண்டாக்கிக் கொண்டுபோவார்க்குப் பண உபகாரமும் தராதல பத்திரமுங் கொடுக்கச் சபையார் ஒழுங்கு செய்திருக்கிறார்கள். நிர்வாகசபையார் அதைத் தீர்மானிப்பார்கள். முதற்றரமானவையாய்க் காணப்படும் பொருட்களுக்காகப் பொன் முத்திரை பரிசாயளிக்கப்படுமென அறிகிறோம்.

## சமாசாரம்.

காலநிலை:—சென்ற வெள்ளி சனி வாரங்களில் இங்கே கடுங் குளிர்காற்றோடு கூடிய பெருமழை பெய்தது. இந்நாட்களில் மழை காரணமாக, கொழும்பிலிருந்து இங்கு வரும் புகைரதமுங் காலதாமசமாக வந்தது. இப்பொழுது மழை வெளித்திருக்கிறது.

புதிய தீபங்கள்:—யாழ்ப்பாண நகர சங்க எல்லையுட் புதிதாய்ப் பதினைந்து இடங்களில் விளக்கு வெளிச்சங்கள் வைப்பதற்குத் தீர்மானஞ் செய்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பட்டின பரிபாலன சங்கம்:- மிஸ்றர் J. K. சண்முகம் அவர்கள் யாழ்ப்பாணம் பட்டின பரிபாலன சங்க அங்கத்தவருள் ஒருவராக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

புத்தாலய பிரதிஷ்டை:— யாழ்ப்பாணப் பட்டினத்திலே புகைரத ஸ்தானத்தை அடுத்து புத்த மதத்தவர் புதிதாய் ஓர் ஆலயங் கட்டி முடித்திருக்கின்றனர். நாகவிகாரா என்பது அவ்வாலயத்தின் பெயர். நேற்றைய தினம் இவ்வாலயப் பிரதிஷ்டை நடைபெற்றது. புத்த வாலிபர் சங்கமே அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து வைத்திருக்கின்றதென அறிகின்றோம்.

கொலை:—சுதமலை வாசியான முருகன் வேலன் என்பவன் தன் மனைவியோடு முரணி அவளைக்குரூரமாய் அடித்தபோது அவள் மூர்ச்சித்து இறந்தனள். வேலன் தான் செய்த கொலையைத் தற்கொலையாகக் காண்பிக்கக் கருதி மரணித்த பெண்ணின் கழுத்திலே ஓர் கொடியை மாட்டி வீட்டு முகட்டிற் றூக்கி விட்டு வெளியே ஓடிக் காரியத்தை ஊர்த் தலைமைக்காரருக்கும் பொலீசருக்குந் தெரிவித்தான். தூக்கிய பிரேதத்தின் கால்க ளிரண்டும் நிலத்திலே முட்டி நின்றனவென்றும், அப்பிரேதத்தைச் சோதனை செய்த வைத்தியர் பெண் இறந்ததற்குக் காரணம் தற்கொலையல்லவென்று அபிப்பிராயப்படுகிறாரென்றும் அறிகிறோம். உ-தாரகை.

பெருமழையும் தெருக்களும்—சென்ற கிழமை பெருமழை பெய்தமையினால் அம்பாந்தோட்டையி லிருந்து வெல்லவாயா என்னுமிடத்துக்குப் போகும் தெருவிற் சிலவிடங்களும், திரிகோணமலை மட்டக்களப்புத் தெருவில் 17-ம் மைலும் 70-ம் மைலும், யக்கவீவா தலைமன்னார்த் தெருவில் 45-ம் மைலும், நிக்கவேசிரியா நிக்கவீவாத்தெருவில் 22-ம் மைலும், பாடினியா சியம் பலாகமாத் தெருவில் 22-ம் 23-ம் 39-ம் மைல்களும், தங்காலை அம்பாந்தோட்டைத் தெருவில் 131-ம் மைலும், கிக்கிருவா கலவெலாத் தெருவில் 9-ம் மைலும் வண்டிப் போக்கு வரத்துக்குத் தகுந்தனவல்லவென்று இலங்கைப் பகிரங்கவேலைப் பகுதியார் தெரிவித்திருக்கின்றனர். கலவாவாக் குளம் அணைகடக்கும் நிலையிலிருக்கிறது.

கைத்தொழிற் கல்வி:—சுதேச பாஷைப் பாடசாலைகளிற் கற்கும் மாணவர்க்குக் கைத்தொழிற் கல்வி பயிற்றுதற்கு வித்தியாபகுதியார் ஓர் ஒழுங்கு செய்திருக்கிறார்கள். மேற்படி பாடசாலைகளிலே கற்று 5-ம் வகுப்பிற் சித்தியடைந்த 14 வயதுக்கு மேற்பட்ட பராயமுள்ள மாணவர்கள் பெற்றார் விரும்பிக்கேட்டால் மாத்திரமே பரீட்சகராற் தெரிந்துகொள்ளப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் கைத்தொழிற் பாடசாலையிலே 2 வருஷங்களுக்குத் தச்சுத் தொழில் பயிற்றப்படுவார்கள். இவருள் விசேஷ திறமை யுடையவர்களைத் தெரிந்து மேலும் ஒரு வருடத்துக்குக் கைத்தொழில் உபாத்தியாயத் தொழிற்குப் பயிற்றற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வகைப் பயிற்சி யடைந்த உபாத்தியாயர்களுக்கு 35 ரூபாய் தொடக்கம் 75 ரூபாய் வரைக்கும் சம்பளம் கொடுக்கப்படுமாம். உ-தாரகை.

நெருப்புப்பெட்டி:—இலங்கையிலே நெருப்புக் குச்சுச் செய்கை அதிகரித்தபின் நெருப்புப் பெட்டியின் விலை மலிவுக்கு வந்துவிட்டது. கொழும்பிலே பெட்டியொன்று ஒருசதமாக விற்கப்படுகின்றதாம்.

ஒத்துழையாமைத் தலைவர்கள் இலங்கைக்கு வருதல்:—ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்த அலிசகோதரர்களும் டக்டர் கிச்சிலு அவர்களும் 1924-ம் ஆ ஜனவரியீ இலங்கைக்கு வருவார்களென அறிகிறோம்.

V. P. பாஷல் ஒழுங்கு:—இலங்கையில் வரும் V. P. பாஷல் 10 நாட்களுக்குள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென அரசினர் தற்போது ஓர் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். இந்த டிசெம்பர்மீ 15-ந் திகதி தொடக்கம் இந்த ஒழுங்கு அனுசரிக்கப்படுகின்றதென அறிகின்றோம்.

இலங்கைச் சர்வகலா சங்கக் கல்லூரி:—கொழும்பிலுள்ள இக்கல்லூரியின் தமிழ்ப் போதகாசிரியராக ஸ்ரீ அரவரதவிநாயகம்பிள்ளையவர்கள் (M. A., L. T) நியமனம் பெற்றிருக்கின்றனர். இவர் ஆரியம் திராவிடம் ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளிலும் வல்லுநர். இவற்றோடமையாது மலையாளம் தெலுங்கு முதலிய சில பாஷைகளும் பயின்றுள்ளவர். பல அரிய தமிழ்நூல்களைத் திருத்தி அச்சிட்டவர். பல வருடங்களாகத் தமிழ்மொழி விருத்தியின் பொருட்டு உழைத்து வருபவர். சென்னை அரசினரால் நியமிக்கப்பட்ட தமிழகராதிச் சங்கத் தலைவரா யுள்ளவரு மிவரே. குறித்த கல்லூரி அதிகாரிகள் தமிழ்ப் போதகாசிரியராக இவரைத் தெரிவு செய்தமை பெரிதும் வியக்கத்தக்கதாம்.

மூன்று கொலையும் தற்கொலையும்:—குருநாக்கலில் இருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள நேரமன்டி என்னுந்தோட்டத்தில் இந்த டிசெம்பர் மாதம் 12-ந் திகதி இரவு பெருமாள் கங்காணியினுடைய வீட்டினுளிருந்து ஒரு பெண்பிள்ளையினுடைய அபாயக் குரல் கேட்ட அயலவனாகிய சாய்பு என்பவன் அதனை அறிந்து வரும்படி ஒரு கூலியாளை அனுப்பினான். அக்கூலியாள் பெருமாளுடையவீட்டுக்கு விரைந்து வந்து கதவைப் பலமுறை தட்டியும் கதவு திறபடாமையினால் இச்சங்கதியைக் கணக்கப்பிள்ளைக்குத் தெரிவித்தான். கணக்கப்பிள்ளை நாலு கூலியாட்களோடு விரைந்து சென்று கதவை உடைத்துத் திறந்து பார்க்கும்பொழுது பெருமாளுடைய மனைவியாகிய மங்கை என்பவளும், அவளுடைய பிள்ளைகளாகிய ஏழு வயதுள்ள முனியம்மா என்பவளும், ஐந்துவயதுள்ள மாரியாயி என்பவளும் இரத்த வெள்ளத்திலே இறந்து கிடந்தார்கள். அவர்களுடைய கழுத்துகள் கத்தியினாலே வெட்டப்பட்டிருந்தன. பெருமாளென்பவனும் வீட்டிலுள்ள ஒரு வளையிலே கயிற்றை மாட்டித் தற்கொலை செய்து தூங்கிக்கொண்டிருந்தான்.

அகில இந்திய தேசீய மகாநாடு:—இந்திய தேசிய மகாநாட்டின் 38-வது வருஷக் கூட்டம் இந்தடிசெம்பர்மீ 26-ந்வ புதன்கிழமை காக்கிநாடாவில் நடைபெறும்.

தென் அமேரிக்காவிற் பூகம்பம்:—தென் அமெரிக்காவில் நடந்த பூகம்பம் காரணமாக "கும்பால் சிபில்" என்னும் இருநகரங்களும் நாசமாக்கப்பட்டன. கும்பால் என்னுமிடத்தில் 85 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவ்விபத்தின் முழுவிபரமுந் தெரியவில்லை.

இறந்தபிறகு மாலையிடுதல்:—ஹைதராபாத் 'ஹிந்து' பத்திரிகையின் மூன்றுவது ஆசிரியர் காண்ஷியம் என்னும் பெரியார் விடுதலையடைந்து வெளிவருகையில் அவருக்கு மாலையிடச் சிலர் பிரயத்தனப்படும்பொழுது அவர் அதை மறுத்து பிராணத் தியாகம் செய்த பிறகு தம்முடைய உடலுக்கு மாலையிடலாமென்று கூறினார்.

உண்ணாவிரதமிருந்து உயிர்துறப்பேன்:—ஆந்திர நாட்டு இளஞ்சிங்கமாகிய ஸ்ரீ பாலசுப்பிரமணிய குப்தா ஒருவருஷம் தண்டிக்கப்பட்டு ராஜமகேந்திரவரம் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் சென்ற 11 நாட்களாக அவர் உண்ணாவிரதமனுஷ்டித்து வருகின்றார். காந்தி திட்டத்திற்கு தேசம் தகுந்த ஆதரவளிக்கவில்லையென்றும் வீண்போராட்டம் செய்வதைவிட பாரதமாதாவின் பலிபீடத்தில் உயிர்துறப்பதே நலமெனது அவர்சொனனாராம்.


### லங்கா விகடன்.

ஓர் மாதாந்த இனிய செந்தமிழ்ப் பத்திரிகை இதின் மனோகரமான குறிப்புகள் விகடவியாசங்கள் அரியமாகாண்களின்பாடல்கள் பயனைத் தரத்தக்கபல வியாசங்கள் சிறுகதைகள் தந்திபர்திகள் அழகிய நவல்கள் மாதந்தோறும் வெளிவரும். மாதிரிக்காப்பிவேண்டுவோர் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருடசந்தா. உள் நாடு ரூ. 1 ச. 25. வெளிநாடு ரூ. 1 ச. 50.

விலாசம்.
மனேஜர்,
லங்கா விகடன்,
பால். ன. கோயில்,
நுவரெலியா,
சிலோன்.

Manager,
Lanka vegaden,
Bal. Na. Coil,
NuweraEliya,
Ceylon.

(Mis. 418.)


வங்காள கவர்னருக்கு தேசபந்துவின் பதில்:—வங்காள கவர்னர் லார்டு லிட்டன் அவர்கள் கவர்ன்மெண்டின் விரோதியாகக் கருதப்பட்ட தேசபந்து தாஸ் அவர்களை அழைத்து மந்திரி சபை அமைப்பதற்கு மூன்றுபேரைச் சிபார்சு செய்யும்படி வேண்டினார். தேசபந்துதாஸ் அவர்கள், இரட்டையாட்சி முறையை ஒழித்துப்போடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சுயராஜ்யக் கட்சியினர் மந்திரி சபையை அமைக்க முன்வர முடியாதென்று லார்டு லிட்டனுக்கு அறிவித்திருக்கிறார்.

கோலாலம்பூரில் மரணம்:—உரும்பராய் வாசரும் இப்பொழுது (ஐக்கிய மலாய் நாட்டைச் சார்ந்த) கோலாலம்பூர் குட்செட் தலைமை லிகிதருமாகிய ஸ்ரீ மாணிக்கமென்பவரின் தந்தையாராகிய ஸ்ரீ சின்னத்தம்பி அவர்கள் இந்த டிசம்பர்மீ 10தேதி திங்கட்கிழமைஇரவு தேகவியோகமாயினர். இவர் சன்மார்க்கம் அன்பு கொடை கடவுள் பக்தி முதலிய நற்குணங்கள் வாய்ந்தவர். இறக்கும்போது இவருக்குவயது 86. இவருக்காகத் துயரப்படும் அனைவரோடும் நாமும் அனுதாபப்படுகிறோம்.

## ஆப்கன் யுத்தமா?

வடமேற்கு எல்லைப் புறத்தில் சில நாகரிகமற்ற ஜாதியினர் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களை கொலை செய்ததன் சம்பந்தமாக தற்பொழுது ஆப்கன் கவர்ன்மெண்டுக்கும் பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கும் மிகவும் மனஸ்தாப மேற்பட்டிருக்கிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களை பிரிடிஷார் வசம் ஒப்புவிக்காமலிருப்பதற்காக ஆப்கன் கவர்ன்மெண்டின்மீது பிரிடிஷார் குறை கூறுகின்றனர். ஆப்கன் கவர்ன்மெண்டாரோ, தங்களா லியன்றவற்றைச் செய்து வருவதாய்க் கூறிவருகின்றனர். நமக்குக் கடைசியாகக் கிடைத்திருக்கும் தந்தியில் 600 ஆப்கன் துருப்புகள் கொலைக்கூட்டத்தாரை நோக்கிப் புறப்பட்டதாகவும் அக்கூட்டத்தார் நாலாபுறங்களிலும் ஒளிந்துகொண்டனரென்றும் தெரியவருகிறது. ஆப்கனிஸ்தானத்தில் இயற்கை யமைப்பை யறிந்தவர்கள் அது ஒரு மலைப்பிரதேச மென்றும் மலைச் சாரல்களில் ஒளிந்துகொள்ளும் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமென்றும் தெரிந்துகொள்வார்கள். ஆனால் ஏகாதிபத்தியத் திமிர் பிடித்த பிரிடிஷ் பத்திரிகைகள் அகாரணமாய் அமீரின்மீது குறை கூறி அவர் வேண்டுமென்றே தன் கடமையைச் சரிவரச் செலுத்த வில்லையென்றும் ஆப்கனிஸ்தானத்தின் விஷயத்தில் பலத்த முறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் பயமுறுத்தி எழுதுகின்றன. பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஏற்கெனவே கைபர் கணவாயை அடைத்துவிட்டதாகவும் காபூலிலிருக்கும் பிரிடிஷ் ஸ்திரீகளை திரும்பி யழைத்துக் கொண்டதாயும் தெரியவருகிறது. இவ்விதமான ஆதாரமற்ற அபவாதங்களைப் பொறுக்கமாட்டாமல் பாரிஸ் நகரிலிருக்கும் ஆப்கன் மந்திரியும் பிரிடிஷாரின் நன்னோக்கத்தில் நம்பிக்கையிழந்து ஆப்கானிஸ்தானத்தைத் தாக்க இவை ஒரு சூழ்ச்சியென்றும், ஆப்கானிஸ்தானத்தின் மீது பிரிடிஷார் படையெடுத்து வந்தால் ஆப்கானியர் கடைசி மனிதர் வரையிற் எதிர்த்து நிற்பரென்றும் சொன்னார். இவ்வித நெருக்கடியான நிலைமைக்கு பத்திரிகைகளின் விஷமத்தனமான பிரசாரமே காரணம். தேசத்திற்குத் தேசம் துவேசத்தை யுண்டுபண்ணி யுத்தத்தைக் கிளப்பக்கூடிய சக்தி தற்கால பத்திரிகைகளுக்கு அதிகமுண்டு. இவ்வித வன்மையைக் கொண்டு பிரிடிஷ் பத்திரிகைகள் புதிதாய் சீர்ப்பட்டு வரும் ஆப்கானிஸ்தானத்தின் மீது போர்புரியத் தூண்டுகின்றன போலுமிருக்கிறது.

இந்தியர்கள் இவ்விஷயத்தில் மிகவும் உஷாராயிருக்கவேண்டும். பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிக்காக ஆப்கானியர்மீது போர் தொடங்கப்பட்டால் அப்போரில் இந்தியர்கள் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. —சுதேசி.

## கடிதம்.

### "மலைமருந்து"க்கு.

(முற்றொடர்.)

இனி, "கிறீஸ்த பள்ளிக்கூடங்களிலே படித்து உபாத்தியாயர்கள் நைமித்தியங்கள் பெறவும் தக்கவர்களாகவுந்தஇவர்கள் தாமே கிறீஸ்த கல்வியால் நஷ்டம் ஏற்படும் என்கிறார்கள்" என மலைமருந்து ஒரு அரிய பெரிய வினாவைக் கடாவுகின்றது. கிறீஸ்த பள்ளிக்கூடத்திலே படித்தவர்களெல்லாரும் உபாத்தியாயர்களாகிச் சேர்ப்பட்டம்பெறத் தக்கவர்களாவரென்பது மலைமருந்தின் கருத்தா? இல்லையேல், சேர்ப்பட்டம் பெறவேண்டிற் கிறீஸ்தபள்ளிக்கூடத்திலே படித்தாற்றான் பெறலாமென்பது மலைமருந்தின் கொள்கையா? சைவவித்தியாசாலைகளிலே கற்றுத்தேறியவர்கள் இனிமேல் உபாத்தியாயஞ் செய்யவும் சேர்ப்பட்டம் பெறவும் அருகராய் வரமாட்டார்களா? மலைமருந்தின் கொள்கையை நோக்கும்போது, அது கிறீஸ்தவர் கொள்கையை அநுசரித்து, அவர்கள் வித்தியாசாலையிலேயே கல்வி பயின்று, மிஷனரிமாரிடத்து அதிக பத்தியும் நன்றியறிதலும் பாராட்டுகின்றதென்று அது எழுதி வெளியிட்டிருக்கும் இக்கடிதத்தைக்கொண்டு அனுமானிக்கத்தக்கதாகவிருக்கின்றது. இங்ஙனமெல்லாமிருத்தலினால், அம்மலைமருந்து இதுவரையில் உபாத்தியாயஞ் செய்யவும் சேர்ப்பட்டம் பெறவும் பாத்திரமுடையதாகவுந்திருக்கவேண்டும். அப்படி வந்துவிட்டதோ இல்லையோ என்பது தெரியவில்லை. அது தனது நாமத்தை மறைத்துவைத்து மலைமருந்தாக வெளிப்பட்டமையினால் இவைகளை உள்ளபடி அறிந்துகொள்ள முடியவில்லை. "கிறிஸ்த பள்ளிக்கூடங்களிலே மிஷனரிமாரின் கல்விகற்றுச் சைவத்துக்கு யாதும் பழுதுமின்றித் தாம் பெற்ற மிஷனரிய கல்வியாலே சைவத்துக்குத் தீங்களென வெளிப்பட்டிருக்கின்ற இவர்களுடைய பேச்சுக்களால் வரக்கூடிய நன்மையென்ன" என்று ஒருவசனத்தை மலைமருந்து வரைந்திருக்கின்றது. யான் நெடுநேரம் ஊன்றிச் சிந்தித்தும் இந்த வசனத்தின் அர்த்தம் எனக்குப் புலப்படவில்லை இதனை வாசிக்கும் அறிவுடையோரேனும் மலைமருந்தேனும் இந்த வசனத்தின் கருத்தை எனக்கு விளக்கிவைப்பரேல் நான் அவர்களுக்கு என்னாளுங்கடமைப்பட்டவனாகவிருப்பேன். சிற்சிலவிடங்களில் மலைமருந்தின் கூற்றை நோக்கும்போது மலைமருந்து ஏனைய அறிவுடையார் செய்வதுபோல் யோசித்து எழுதுவதை யொழித்து, எழுதிவிட்டு யோசிப்பதுபோற் காணப்படுகின்றது.

மிஷனரிமார் இந்த நாட்டிற்கு வருவதேனென்று அக்கூட்டத்திலே சேர் இராமநாதன்வினவினராம். அதுகாரணத்தை இதுவரையிலே அவர் அறியாதிருப்பதை யோசிக்க ஆச்சரியமாயிருக்கின்றது" என்று மலைமருந்து விளம்பிப் பேராச்சரியமுறுகின்றது. அமரிக்கா அயிரோப்பா முதலிய அந்நியதேசங்கட்குச் செல்லவகையின்றிக் கிணற்றுத் தவளைபோல, இந்த ஊரிலேயே யிருந்துகொண்டு, மிஷனரிமாரே தெய்வம், அவர்வாக்கே சத்தியவாக்கு, அவரொழுக்கமே சீர்திருத்தம் என்று, கொடுத்த கோலைப் பற்றிச் செல்லும் அந்தகனை யொத்த மலைமருந்து போல்வாருக்கு, அமரிக்கா இங்கிலாந்து முதலிய இடங்கட்குச் சென்று, அங்கே மிஷனரிமாரின் யோக்கியதையையும் அவர்களொழுக்கத்தையும், அவர்களுக்கு அங்குள்ள மதிப்பையும் இப்படிப்பட்ட பிறவற்றையும் உள்ளபடி யாராய்ந்து பிரத்தியட்சமாகக் கண்டுவந்த சேர் இராமநாதன் அவர்களுடையவினாபேராச்சரியமாகத்தானே இருக்கும்! மலைமருந்து ஆச்சரியப்படுவதோடு அமையாது சேர் இராமநாதனவர்கள் நிகழ்த்திய வினாவுக்குத் தன் அறியாமைக்கிசைய ஒரு விடையையுஞ்செப்புகின்றது அதுஎன்னவென்றால் "அயிரோப்பாவிலும் அமெரிக்காவிலுமிருந்து மிஷனரிமார் இந்நாட்டிற்குவந்து கோடிக்கணக்கான ரூபாய்களை இந்நாட்டிலே செலவிட்டு கல்வி சாஸ்திரங்களைப் படிப்பிப்பது இங்குள்ளாரைத் திருத்தி அவர்களையுந் தம்முடைய நிரைக்கு உயர்த்தி வைக்கவும் நாட்டையும் அவர்களையும் சீர்ப்படுத்தி வைக்கவும் தம்முடைய சத்தியமறைக்கு அவர்களை மனந்திருப்பி வைக்கவுமேயாகும்" என்பதாம். இந்த நோக்கம் வெள்ளாடு நனைகிறதென வேங்கைப்புலி விம்மிவிம்மி யழுதவாறென நோக்கமென்பதை அறிவுடையோர் நன்கறிவர். அது கிடக்க, இந்த மிஷனரிமாருடைய சொந்த தேசங்களிலேயே கோடிக்கணக்கானோர் சமயபத்தியின்றி நிரீச்சுரவாதிகளாய்மிகவும்கேவலநிலையிலேயே இருக்கின்றார்களென்று, அந்நாடுகளிலிருந்து இங்கு வரும் அறிவாளிகளும், இங்கிருந்து அந்நாடுகளுக்குச் சென்று மீண்டு வந்த சேர் இராமநாதன்போன்ற பெரியோரும் சொல்லக்கேட்டிருக்கின்றோம். அங்ஙனமாயின் காருண்ணியமுள்ள இந்த மிஷனரிமார் ஊர்விட்டுத் தேசம்விட்டு அலைந்து வசதியீனப்பட்டுக் கோடிக்கணக்கான ரூபாய்களையும் இங்கே செலவு செய்து சிரமப்படாமல், தங்கள் சுவதேயத்திலுள்ளே யுள்ள சகோதரர்களைச் சீர்ப்படுத்தித் தம்முடைய நிரைக்கு உயர்த்தி வைத்துத் தம்முடைய சத்தியமறைக்கு அவர்களை மனந்திருப்பிவிட்டுப் பின்னரன்றோ இங்கு வரல்வேண்டும். உடன்பிறந்த சகோதரன் தீராப்பிணியாற் றுயருற அவனை அலட்சியஞ்செய்து அந்நியனுக்குற்ற நோயை நீக்க முன்னிற்பது முறையல்லவே. உட்சுவரிருக்கப் புறச்சுவர் தீற்றுவது உசிதமாகாதன்றோ. "மிஷனரிமார்கள் செய்த நன்மைகளுக்கு விரோதமாக முசுமுசுப் பேசினவர்கள் 'நன்றி மறவேல்' என்னும் ஔவை வாக்கைக் கண்டிலரோ" என்று மலைமருந்து சாற்றுகின்றது. நன்றியெனப்படுவது யாதுங் காரணம்பற்றிப் பிரதியுபகாரத்தை நோக்காது செய்யப்பட்டதேயாம். இந்நன்றி தம்நயங்கருதிச் செய்யப்பட்டுத் தோற்றத்தளவில் நன்றிபோற் காணப்படுஞ் செயலாம். வலைஞன் தூண்டிலில் மாட்டி யிட்ட இரையின்பொருட்டு அதனை விழுங்கும் மற்சம் அவ்வலைஞனிடத்தில் நன்றி பாராட்டுமேல், இவர்களும் மிஷனரிமார்மீது நன்றிபாராட்டல் வேண்டுமென்பது நியாயமாம்.

"சைவராலே கட்டப்பட்டுச் சைவரின் ஆதீனத்திலே யிருந்து சைவப்பிள்ளைகள் படித்துவந்த சில சைவப்பள்ளிக்கூடங்களை அரசாட்சி

யார் தமக்காக்கி நடத்திவருகின்றார்கள்" என வும், அவற்றை விடுத்து மிஷனரிமாரின் பள்ளிக்கூடங்களிற் சைவர் குதிரையேறவேண்டிய காரணம்யாதெனவும் மலைமருந்து கனநகிறது. அரசினர் வித்தியாசாலைகளிற்சைவப்பிள்ளைகள் கல்வி பயில்வதனுல், சமயவிஷயமாக அப்பிள்ளைகளுக்கு வரும் கேடு யாதுமில்லை. இந்துசாதனம் போன்ற பத்திரிகைகள் அங்கு படிக்கும் பிள்ளைகளுக்கு அனுப்பப்பட்டால் அதனைத் தலைமை உபாத்தியாயர் எடுத்து ஒளித்து வைக்கமாட்டார். பங்கஜம் போன்ற நிதமி கனை அவர் அன்னை தந்தையர் பெற்றவிடுறிக்கிளை அவர் அன்னை தந்தையர் பெற்றவிடுதிக் கனை ராவிற் கரவிற் கொண்டு செல்ல தவலமுற இரவிற் கரவிற் கொண்டு செல்ல மாட்டார்கள். இன்னும் எத்தனையோ அடாத செயல்களைச்செய்யமாட்டார்கள்.

சமதாசினர் இப்பொழுது இங்கே வித்தியா சாலைகளைத் தாபிக்கத் தலைப்பட்ட பிரகாரம், ஆரம்பத்திலே, பாதிரிமார் கையிற் கல்வியூட்டும் பொறுப்பைக் கொடாது, இடங்கள் தோறும் வித்தியாசாலைகளைத் தாபிக்கத் தலைப்பட்டிருப்பரேல், சைவர்களாகிய எங்களுக்கு இத்துணை அனர்த்தம் சேர்ந்திருக்கமாட்டாது.

சட்டசிருபணசபைக்குச் செல்வதற்குச் சம்மதம் வாங்குவதற்காகத்தான் லேர் இராமநாதன் முதலியவர்கள் இப்படிப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களுக்கு மாறுகப் பேசுகிறார்கள் என்று மலைமருந்து குடுஞ்சொல்லி அதனை "விழலே! விழல்!" என்று தானே மீட்டுந் தன் வாயாலுரைக்கின்றது. மலைமருந்து அப்படியெண்ணுவது உண்மையாக விழலே! விழல்!!

இங்ஙனம்,
விண்ணுரமிர்து.

## சுபோதத் துணுக்கைகள்.

ஐயன்மீர்!

மனம் வாக்குக் காயங்களில் எட்டுணையும் மாசற்ற மகான்கள் சும்மிடத்துள்ள வழுக்களைக் கண்டு மனஞ் சகியாது கூறும் வன்மொழியானது, தொடக்கத்தில் சகித்தற்கரிய கன்னகரேமாயிருப்பினும், பின்னுல் உலப்பற்ற நன்மைகட்கு ஏதுவாயிருத்தலினுல், அதைக் குறித்துச் சிந்தை வருந்தாது அவ்வார்த்தையைக் குருமொழியாகக் கோடல்வேண்டும். உருத்திராக்ஷப் பூனையை நிகர்த்த கயவஞ்சகரது இனிய மொழியானது, ஆரம்பத்தில் அளவற்ற நன்மை பயப்பதுபோலக் காணப்படினும், அந்தத்தில் மரியாதையையும், அரிதினீட்டிய திரவியத்தையும் அழிக்குமாதலின், அதற்குக் காது கொடாது அகற்றிவிடுதல் வேண்டும். இதற்கு மங்கை பாகராகிய சாக்ஷாத்சிவபெருமான், மலரா லெறிந்த மன்மதனைத் தடிந்ததும், கல்லா லெறிந்த சாக்கியநாயனுருக்குச் சிவகதி வழங்கியதுமே போதிய சான்றாகும். இதபற்றியே "ஆட்டுவாணியன் ஆலிங்கனத்தினும் புழுகு கூட்டு வாணியன் கைக்குட்டு நல்லது" என்ற ஒரு முதுமொழி வழங்குகின்றது.

பொய்யுரை புகல்வது தீதாமெனப் பொது விதியாற் கூறப்பட்டிருப்பினும், குருவையும், பசுவையுங் கொலையிலிருந்து ரக்ஷிப்பதற்காகவும், கன்னிகைக்குக் கடிமணம் பேசி வரன் பகுதியாரோடு வதுவை நிறைவேற்றுஞ் சமையத்திலும், சொல்லும் பொய்யானது வாய்மையினும் மிக்க மாக்ஷிமையுடையது.

குதிரையும், உடுக்கும், பொன்னும், துட்டரும், எதிர்த்து வார்த்தை யாடுகின்ற மனைவியும், நஞ்சு பொருந்திய சர்ப்பமும், விளக்கிய எள்ளும், கரும்பும், இளநீரும் ஆகிய ஒன்பதும் தண்டித்தவருக்கே நன்மை தருவதன. இவைகள் வருத்தாதவர்கட்கு ஒருபோதும் இதஞ்செய்யமாட்டா. அது எங்ஙனமெனின், குதிரையை ஏறுவதற்காவது, வண்டியிற் பூட்டுவதற்காவது உபயோகப்படுத்தாமல், கொள்ளு கடலை உழுந்து முதலிய உணவுகளைக் கொடுத்துச் சொகுசாகக் கட்டி வைத்திருந்தால், ஒன்றுக்கும் அடங்காமல் இரத்த வெறிகொண்டு எஜமானனுடைய உயிருக்கும் யமனுகவந்துவிடும். சடிவாளமும், முகப்பட்டாவும் போட்டுக் களைக்கக் களைக்க அநேக முறை கட்டியடித்தால், வெறிக்குணம் முழுவது மடங்கிச் சுவாண்போலச் சொன்னபடியெல்லாங் கேட்கும். உடுக்கைச் சும்மா வைத்திருந்தால், அதனுல் ஒருவிதமான சுகத்தையும் அடைய முடியாது. தாளத்துக்குத் தக்க விதமாய் அடிக்குமே லடி அடித்தால், செவிக்குத் திவ்வியமாகிய இன்பத்தை யளிக்கும். பொன்னைப் பெட்டகத்திலே பூட்டி வைத்திருந்தால், மாசு படிந்து பிரயோசனமின்றி வாளா கிடக்கும். அதைக் காய்ச்சிப் பட்டடையில் வைத்துச் சுத்தியலால் மாறி மாறி அடித்தால், விலை மதித்தற்கரிய அழகிய ஆபரணங்களை யெல்லாஞ் செய்ய உபயோகப்படும். துட்டருக்கு எத்தகைய நீதிகளை எடுத்து இயம்பினும் ஒன்றுக்குங் கட்டுப்படாமல் தம்மைவிடச் சண்டியர் ஒருவருமில்லையென்று தலை கால் தெரியாமல் சன்னத மாடுவார்கள். அந்த நேரத்தில் அடி கொடுத்தாற்றான் சற்றே யடங்குவார்கள், நாயகனுேடு எதிர் வார்த்தை யாடுகின்ற மனைவி மாற்று கொடி போடுவதுபோல எந்நேரமும் வாய்காட்டிக்கொண்டே யிருப்பள். அவளோடு எப்போதுஞ் சண்டையிட்டுக்கொண்டிருந்தால், அயலவர் பழிப்பார்களே! ஆதலால் அழுலை எப்படியாவது கத்திக்கொண்டு கிடக்கட்டுமென்று மௌனமா யிருப்பின், அயல் இல்லத்துக்கு எரியூட்டி குடும்பத்தையும் குலத்துப் பிறந்த குலம் புகுந்த குலம் இரண்டிற்கும் நீங்காத வடுவை உண்டாக்கி விடுவள். அத்தகைய அடங்காமாரிக்கு வாகாமகோசரமாக வார்த்தையாடும்போது காலாறு பிரப்பம் பழம் கொடுத்தால் நாயகனுடைய சொற் கேட்டு நடப்பள். சிற்றத்தோடு படம் விரித் தாடிக்கொண்டு நிற்கும் பாம்புக்குத் தண்ணளி காட்டினுல் துரிதமாகக் கடிப்பதற்குத் தாத்திக்கொண்டு வரும். உடனே உரத்த தடிகொண்டு உச்சிமீது ஓர் பூசை கொடுத்தால் அல்லித்தண்டுபோல அயர்ந்து கிடக்கும். விளக்கியஎள்ளை ஒரு பாத்திரத்திலே நிறைத்து வைத்திருந்தால் எண்ணெய் வருமா? அதைச் செக்கிலே போட்டு நன்றாய்ச் சிதையும்படி ஆட்டினுல் தேவையான எண்ணெய் எடுக்கலாம். கலக்குப் பதத்து இளநீரைக் கையிலே வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தால் தாகந் தணியுமா? அதன் பிற்பக்கத்தைக் கத்தியாற் சீவி, வட்டமாகச் சிரட்டை பிளம்ப உடைத்தால், அதில் நிறைந்திருக்கும் மதுரமான நீரைப் பருகித் தாக சாந்தியடையலாம். நன்கு முற்றிய கரும்பைக் கட்டுக் கட்டாக வைத்திருந்தால், ஒரு உபயோகத்துக்கும் உதவமாட்டாது. அதை ஆலை என்று சொல்லப்படுகின்ற செக்கிலேயிட்டு நசியும்படி ஆட்டினுல் அதிலிருந்து பாயுஞ் சாற்றினைக் காய்ச்சிக் கற்கண்டு, சீனி, சர்க்கரை, வெல்லம் முதலிய இனிய பதார்த்தங்களை உண்டாக்கலாம். இந்நியாயம் பற்றியே மேலே காட்டிய ஒன்பது வகையுந் தண்டித்தவர்க்கே நன்மையைத் தருமெனச் சாற்றினேம்.

காசினியில் ஒவ்வொருவருந் தத்தம் மனம் கருதிய பொருள்களிலே கண்ணுயிருப்பர். அது எங்ஙனமெனின், தன்னை யுணர்ந்த ஞானிகட்கு எல்லாஞ் சிவமெனக் கண்டு ஏகாந்தமா யிருத்தலிலே கண். பக்திமான்கட்குச் சந்ததமும் பரமபதியின் பாதாரவிந்தங்களிலே கண். சிவதயையோடு பல தருமங்களையுஞ் செய்யுந் தியாகிகட்குச் சிவபுண்ணியங்களிலே கண். இறைவன் திருவடியை வணங்காத லோகாயுதருக்கு இம்மைச் சுகங்களிலே கண். கல்வியறிவற்ற காமுகருக்குக் கணிகை மாதரிலே கண். நற்குண நற்செய்கைகளோடு கற்புநெறி தவறாதகங்கையருக்கு நாயகனைத் தெய்வமாகவழிபட்டுக் குற்றேவல் செய்வதிலே கண். பலராலும் இகழப்படும் பரத்தை மாதருக்குப் பணக்காரரான வாலிபரிலே கண். கல்வியைக் கற்கவேண்டுமென்னும் அவாவுள்ள மாணுக்கருக்கு ஆழமான பொருள் செறிந்த காவியங்களிலே கண். கல்யாணஞ் செய்யாது அறவிகள்போலக் கள்ளவேடம் பூண்டு நடிக்குந் தாடிச்சாமிகட்கு இளங் கன்னியர்மீது கண். திருடிக்கொண்டு திரியும் வீடுதி நாய்கட்குத் திறந்திருக்குஞ் சமயலறையிலே கண். பனைவட்டிலே யிருக்கும் பருந்துக்கு கோழிக்குப் பிறகே திரியுங் குஞ்சுகள்மீது கண். அல்லும் பகலும் அறிவழிந்து கிடக்குங் குடியருக்குச் சாராயப் போத்தல்களிலுங் கள்ளுச் சாடிகளிலுங் கண். ஈட்டிய பொருளை வீணிற் றுலைக்கும் வேலையற்றவருக்குச் சொற்கேட்டான் சீட்டாடல் முதலிய சூதுகளிலே கண். ஆன்ம இரக்கமற்ற மாமிச போசனிகட்கு கொழுத்த ஆடு கோழிகளிலே கண். பிறர் பொருளைக் கொள்ளையடிக்குங் கள்வருக்குப் பிரபுக்கள் வீட்டிலே கண். இங்ஙனம் ஒவ்வொருவருக்குந் தான் தான் விரும்பிய வழிகளிலே கண்ணுேட்டமிருக்கும். அறிவாளிகள் நன்மையான வழிகளிற் கண்ணுயிருப்பாரே யன்றித் தீமையான வழிகளில் ஒருபோதும் நோக்கம் வையார்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

## விளம்பரம்.

### பிரவேச வகுப்பு.

இவ்வகுப்பு வழக்கம்போலக் கோப்பாய்ச் சைவவித்தியாசாலையில் 1924-ம் ஆடு தையீ 1உ தொடக்கம் நடைபெறும். இதிற் சேர விரும்புவோர் இம்மாசம் 28ந் திகதிக்குப் பிந்தாமல் தங்கள் வயசு, ஈற்றிற் சித்தியெய்திய வகுப்பு, விலாசங்களுடன் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்புக.

கோப்பாய்,
17—12—23.

மு. சுவாமிநாதன்,
(Mis. 417.)

### ஓர் பிராமணுேத்தமர் தேவை.

கிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொத்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றுயர்த்தப்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமிகோயில்
காரியதரிசி.

(Q. 45)

### நாணயமான சரக்குகள்! சகாயவிலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள்.
எல்லா லேட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில் பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது,

சேலை 1க்கு ரு. 45 முதல் ரு. 100 வரை.

கந்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்சு ஜரிகையினுல் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்சு உயர்ந்த ஜரிகையினுல் பூவேலைகள் செய்யப்பட்டது.

சேலை 1-க்கு ரு. 80 முதல் ரு 150 வரை.

"கேட்லாக்" இனும்.
உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

**Silk Pitamber Coy.,**
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27.)

### முத்துக்குளிப்பதற்கு ஆகவேண்டிய வேலைக்குக் கேள்விப்பத்திரம்.

மறிச்சுக்கட்டியில் முத்துக்குளிப்பதற்குக் கட்டிடம் கட்டும் நிலத்திலிருக்கும் மரங்கள் செடிகளை வெட்டித் துப்பரவாக்குவதற்கு விரும்புவோர் முத்திரை இட்டு ஒட்டப்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்பலாம் என்பதை இத்தால் அறிந்துகொள்க.

2. வெட்டித் துப்பரவாக்கவேண்டிய இடத்தின் விசாலம் ஏறக்குறைய 100 ஏக்கர் வரையில் மரங்கள் அடர்ந்த நிலமும், 70 ஏக்கர் வரையில் சமவளர்ச்சியுள்ள நிலமும், 50 ஏக்கர் வரையில் ஐதானவும் வளர்ச்சிகுறைந்தவுமான நிலமுமாய்ப் பார்க்கலாம்.

3. நிழலுக்குவேண்டிய மரங்கள்விர மற்றும் எல்லாக்காட்டு மரங்களையும் வெட்டுவதும், அவைகளின் வேரைத் துப்பரவாய்ப் பிடுங்குவதும், இவைகளைச் சேர்த்து எரிப்பதுவும், நிலத்திலிருக்கும் புல் செடிகளை அகற்றுவதும் வெட்டித்துப்பரவாக்குவோர் கடமையாகும்.

4. "முத்துக்குளிப்பதற்கு கட்டிடம் கட்டப்பட்ட நிலத்தைத் துப்பரவாக்குவதற்குக் கேள்விப்பத்திரம்" என்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதி இரண்டு கொப்பி அனுப்பவேண்டும், ஒன்று வடமாகாண கவுண்மேந்து ஏச்சன்றருக்கும் மற்றது மன்னுரிலுள்ள உதவி ஏச்சன்றருக்கும். இப்பத்திரங்கள் இவர்கள் கந்தோர்கட்கு 1924ஆடு தைமீ 18ந் திகதிக்கு முன் சேரவேண்டியது.

5. கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதாகியவேலை 1924ஆடு சித்திரைமீ 15ந் திகதிக்கு முன் முடியவேண்டியது.

6. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துகளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

7. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச் சீட்டைக் கொடுத்துப்பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரம்ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசண்டினுல் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப் பத்து நாளைக்குள்ளாக போதிய பிணை கொடுக்கத்தவறினுல் அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும்.

8. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைக்காரரை பிணையுதிக்குச் சேர்க்கவேணும். மற்றுங்காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியிலும் மன்னூர்க் கச்சேரியிலும் அறிந்து கொள்ளலாம்.

9. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ் சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

எஸ். டபிள்யு. சி. சிறுதர்,
கவுண்மேந்து ஏச்சன்றர்.

யாழ்ப்பாணக்கச்சேரி,
1923ஆடு மார்கழிமீ 18உ.
(G. 356).

## விளம்பரம்.

காலால் வேலை செய்யக்கூடியதும் டெம்மி அரைத்தாள் அடிக்கக்கூடியதுமான அச்சியந்திரம் ஒன்று விற்பனவுக்கு இருக்கிறது.

இப்போ நல்ல நிலைபரத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறது.

வேண்டுவோர் கீழ்க்காணப்படும் விலாசத்திற்கு விலைவிபரத்திற்கு எழுதவும்.

S. S. சண்முகம்,
சண்முகநாத புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(M. 30)

### பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த வீ. ஸாமி அய்யங்காருடைய அறைக்கீரைவிரைத்தைலம்.




இதன் குணம்:

பித்த மேகசீரணது சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐக்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த கோட்டைசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறுது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ் கோமளத்தம்மாள்,
மானியுபாக்கரர்,
8, பிராமஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

### இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
புஷ்டிக்கு கைகண்ட மருந்து.
இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.
ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினுங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I

(Q. 40)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,